# தமிழ்நாடு தகவல் ஆணையம்

எண்.19, அரசு பண்ணை இல்லம். பேர்ன்பேட்டை, நந்தனம், சென்னை - 600 035
தொலைபேசி எண். 044 - 2951 5590

**ஆணை நாள் 13.07.2026**

**முன்னிலை**

## முனைவர் அதுல்ய மிஸ்ரா, இ.ஆ.ப (ஓய்வு)
## மாநில தகவல் ஆணையர்

*****

**வழக்கு எண். CP 1995/SCIC/2024**

திரு முகம்மது காசிம் புகார்தாரர்

//எதிர்//

பொதுத் தகவல் அலுவலர்/
காவல் துணை ஆணையர், ....... பொதுஅதிகார அமைப்பு
மயிலாப்பூர் மாவட்டம்,
சென்னை 600 004

**ஆணை**

| | | |
|---|---|---|
| **1.** | **மனுதாரரின் தகவல் பெறும் உரிமைச் சட்ட மனு** | **02.03.2024** |
| 2 | பொதுத் தகவல் அலுவலரின் பதில் | 03.04.2024 |
| 3. | மனுதாரரின் புகார் மனு | 07.04.2024 |
| 4. | அதன் பின்பு பொதுத் தகவல் அலுவலரின் பதில் | 25.09.2024 |
| 5. | மனுதாரரின் ஆட்சேபனைக் கடிதம் | 24.12.2024 |

மனுதாரர், பொதுத் தகவல் அலுவலர் / காவல்துணை ஆணையர், மயிலாப்பூர் சரகம், சென்னை என்ற முகவரிக்கு அனுப்பிய சட்டப்பிரிவு 6(1)-ன் கீழ் 02.03.2024 தேதியிட்ட மனுவில் Please provide me with the copies of complaint and documents lodged / submitted by Govindarajan against me with respect to the police notice dated 02.03.2024 issue to me by the Inspector of Police (Crime Division), D4 Zambazaar police station? என்பது போன்ற தகவல்களை 8 இனங்களில் வழங்குமாறு கோரியுள்ளார்.

2. இன்றைய விசாரணைக்கு மனுதாரர் ஆஜரானார். பொதுத் தகவல் அலுவலர் சார்பில், திரு இளங்கோவன், காவல் உதவி ஆணையர், இராயப்பேட்டை சரகம், சென்னை ஆணையத்தில் நேரில் ஆஜரானார்.

3. இன்றைய விசாரணைக்கு பொதுத் தகவல் அலுவலர் சார்பில் ஆஜரான அலுவலர், மனுதாரரின் சட்டப்பிரிவு 6(1)ன் கீழான மனுவிற்கு, 03.04.2024 மற்றும் 25.09.2024 ஆகிய தேதிகளிட்ட கடிதங்களின் வாயிலாக தகவல் வழங்கப்பட்டுள்ளதாகத் தெரிவித்தார். மேலும், மனுதாரரின் வழக்கானது தற்போது வரையிலும் விசாரணையில் இருப்பதாகவும், பெரிய அளவிலான முரண்பாடுகள் எதுவும் கண்டறிப்படவில்லையென்றும் தகவல் தெரிவிக்கப்பட்டுள்ளது. இருப்பினும், மனுதாரர் தனது வழக்கு குறித்து சமீபத்தில் உரிமையியல் நீதிமன்றத்திலிருந்து பெறப்பட்ட உத்தரவின் அடிப்படையில் தனது கோரிக்கையினை நிவர்த்தி செய்யுமாறு விசாரணையின்போது தெரிவித்தார். ஆனால் மனுதாரர் தனது கோரிக்கை குறித்து துறையின் தகுதிவாய்ந்த உயர் அதிகாரிக்கு மனு செய்வதன் மூலம், மனுதாரரின் மனுவினை தனியாக ஆய்வு செய்து, அதனடிப்படையில் சட்ட விதிகளுக்குட்பட்டு நடவடிக்கை மேற்கொள்ள ஏதுவாக இருக்கும் என்பதை ஆணையம் மனுதாரருக்கு எடுத்துரைக்கிறது. **எனவே, இத்துடன் இந்த புகார் மனுவின் மீதான விசாரணை முற்றாக்கம் செய்து உத்தரவிடப்படுகிறது**.

**ஒம்/-(அதுல்ய மிஸ்ரா)**
**மாநில தகவல் ஆணையர்**

**//ஆணைப்படி//**

**உதவிப்பதிவாளர்**

**<u>வழக்கு எண். CP 1995/SCIC/2024</u>**

பெறுநர்
**பொது அதிகார அமைப்பு**
பொதுத் தகவல் அலுவலர்,
காவல் துணை ஆணையர்,
மயிலாப்பூர் மாவட்டம்,
சென்னை 600 004

**மனுதாரர்**
திரு முகம்மது காசிம்,
சாந்தி மெடிக்கல் ஷாப்,
ஷாப் நம்பர் 98, பாரதி சாலை,
இராயப்பேட்டை,
சென்னை 600 014

TK/PS